FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# தவணைப் பரீட்சை, யூன் - 2019

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

| தரம் :- 13 (2019) | 21 | T | I | பொருளியல் - I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|

## பகுதி I

**கவனிக்குக.**

- ❖ ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
- ❖ ***சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (பரீட்சையில் விடையளிப்பதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்)***

01. ‘வள அருமை’ பொருளியலில் மையப்பிரச்சினையாகக் கருதப்படுவதற்குரிய காரணம்.
   1) மனித விருப்பங்கள் வரையறையற்றதாகவும் வளங்கள் வரையறுக்கப்பட்டதாகவும் காணப்படுதல்.
   2) மனித விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கு கிடைக்கின்ற வளங்கள் போதுமானதாகக் காணப்படுதல்.
   3) சந்தை பொருளாதார சமூகங்களுக்கு மட்டும் பொதுவானதாகக் காணப்படுதல்.
   4) பொருளாதார செயற்பாடுகளான உற்பத்திக்கும் நுகர்வுக்கும் காரணமாயிருக்கின்றமை.
   5) எல்லாச் சமூகங்களும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றமை.


agaram.lk

02. பொருளாதாரப் பண்டமொன்றின் முக்கியமான பண்புகளில் ஒன்று
   1) அது உற்பத்தியிலும் நுகர்விலும் அமையச் செலவீனங்களைக் கொண்டிருக்கும்.
   2) அது வளச்செலவுடன் பூச்சிய அமையச் செலவில் உற்பத்தி செய்யப்படும்.
   3) அது அதிகரித்துச் செல்லும் எல்லைச் செலவில் உற்பத்தி செய்யப்படும்.
   4) அது அருமையான வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுபவை.
   5) அது எல்லையற்ற நிரம்பலைக் கொண்டிருப்பதனால் பூச்சிய விலையில் பெறப்படும்.

03. காரணி உடமையாளர்களின் வருமான மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான காரணி.
   1) அவர்களுக்கு கிடைக்கும் வாடகை, வட்டி, கூலியும் சம்பளமும் மற்றும் இலாபத்தின் அளவு.
   2) காரணிச் சந்தையில் நிலவும் மிகைக் கேள்வியும் காரணிகளின் விலை அதிகரிப்பும்.
   3) காரணி உடமையாளர்கள் கொண்டுள்ள காரணி உடமையிலும் அவற்றின் விலைகளின் மட்டமும்.
   4) உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்தப்படுகின்ற மூலதனம், ஊழியத்தின் இணைப்பு மட்டம்.
   5) காரணி உடமையாளர்கள் மீது அரசு விதிக்கின்ற வரிகளின் அளவு.

04. பொருளாதாரமொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள A புள்ளியிலிருந்து B புள்ளி நோக்கிய நகர்வுக்கு பொருத்தமான நிகழ்வாக எதனை கருதமுடியும்.

1) இயற்கை அனர்த்தத்தின் காரணமாக மூலதன கையிருப்பு வீழ்ச்சியடைதல்.
2) வேலையற்ற இளைஞர்கள் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படுதல்.
3) மொத்தக் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் மெய்வெளியிட்டு மட்டம் நீண்டகாலத்தில் குறைதல்.
4) வரட்சி காரணமாக பல மணித்தியால மின்வெட்டினால் வளப்பயன்பாடு குறைதல்.
5) வரட்சி காரணமாக விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரின் அளவு குறைவடைதல்.




05. X என்ற பண்டத்தின் சமநிலை விலை ரூபா 40 ஆகவும் சமநிலைத்தொகை 400 அலகுகளாகவும் உள்ள போது நுகர்வோன் மிகை 8000 ரூபாவாகக் காணப்பட்டது. இந்நிலையில் இப்பண்டத்தின் ஆகக்கூடிய கேள்வி விலை என்னவாகயிருக்கும்?

1) ரூபா 80 2) ரூபா 60 3) ரூபா 40 4) ரூபா 20 5) ரூபா 100

06. A என்ற பண்டத்தின் விலை வீழ்ச்சியடையும் போது எதிர்க்கணிய பதிலீட்டு விளைவை விடை எதிர்கணிய வருமான விளைவு சார்பளவில் உயர்வாகக் காணப்பட்டது எனின் A பண்டத்தை

1) ஆடம்பரப்பண்டம் என்பர் 2) அத்தியாவசியப் பண்டம் என்பர்
3) இழிவுப் பண்டம் என்பர் 4) சாதாரண பண்டம் என்பர்
5) கிபன் பண்டம் என்பர்

agaram.lk

07. பண்டமொன்றின் நிரம்பல் கோட்டினை வலது புறமாக நகர்த்தும் காரணி எது?

1) கருத்தில் எடுக்கப்படும் பண்டத்தின் விலை அதிகரித்தல்.
2) தொடர்புள்ள பண்டங்களின் விலை அதிகரித்தல்.
3) உள்ளீட்டுப் பொருட்களின் விலை அதிகரித்தல்.
4) எதிர்காலத்தில் கருத்தில் எடுக்கப்படும் பண்டத்தின் விலை அதிகரிக்கும் என உற்பத்தியாளர் எதிர்பார்த்தல்.
5) அரசாங்கம் உள்ளீட்டுப் பொருட்களுக்கு வழங்கும் மானியத்தினை அதிகரித்தல்.

08. சிகரட்டின் நிரம்பல் சார்பு $QS = -200 + 10P$ ஆகக் காணப்பட்டது. சிகரட்டின் ஒன்றின் விலை ரூபா 50 இலிருந்து ரூபா 60 ஆக அதிகரிக்கும் போது அதன் விலை சார் நிரம்பல் நெகிழ்ச்சி

1) 300 இலிருந்து 400 ஆக அதிகரித்தல் 2) 1.50 இருந்து 1.67 ஆக அதிகரித்தல்
3) 1.75 இருந்து 1.5 ஆக குறையும் 4) 1.67 இலிருந்து 1.5 ஆக குறையும்
5) 1.77 இலிருந்து 1.5 ஆக குறையும்

09. குறிப்பிட்ட வருடமொன்றில் ஆடையொன்று போட்டிச் சந்தையில் 1500 ரூபா விலையில் 5000 அலகுகள் விற்பனை செய்யப்பட்டது. பிறிதொரு வருடத்தில் அவ்வடை 1500 ரூபா விலையில் 6000 அலகுகள் விற்பனை செய்யப்பட்டது எனின் ஆடைக்கான கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றில் ஏற்பட்ட எம்மாற்றம் இத்தகைய நிலையை ஏற்படுத்தியிருக்கும்.

| | **கேள்வி** | **நிரம்பல்** |
|---|---|---|
| 1) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 2) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 3) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 4) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 5) | அதிகரிப்பு | மாற்றமில்லை |

10. 'சமபோசாவை' உற்பத்தி செய்யும் கம்பனியொன்று ஒரு கிலோகிராம் பைக்கற் ஒன்றினை ரூ 500 விலையில் மாதமொன்றுக்கு 1000 பைக்கற்றுக்களை சந்தைக்கு நிரம்பல் செய்வதாகக் கருதி அதன் விலை ரூபா 200 ஆகக் காணப்பட்டால் அதனை கம்பனி நிரம்பல் செய்யமாட்டாது எனவும் கருதிக்கொள்க. 1000 பைக்கற்றுக்களை நிரம்பல் செய்யும் போது அக்கம்பனியின் மொத்த வருமானம் உற்பத்தியாளன் மிகை, மொத்தமாறும் செலவு என்பவற்றை சரியாகக் காட்டும் விடை எது?

| | **மொத்த வருமானம் (ரூபா)** | **உற்பத்தியாளன் மிகை (ரூபா)** | **மொத்தமாறும் செலவு (ரூபா)** |
|---|---|---|---|
| 1) | 50,000 | 15,000 | 35,000 |
| 2) | 500,000 | 250,000 | 250,000 |
| 3) | 500,000 | 150,000 | 250,000 |
| 4) | 500,000 | 150,000 | 350,000 |
| 5) | 500,000 | 350,000 | 150,000 |

11. X என்ற பண்டத்தின் கேள்விச்சார்பு $Qd = 600 - 2P$ எனவும் நிரம்பல் சார்பு $QS = 3P$ எனவும் தரப்பட்டுள்ளது. இப்பொருள் மீது சிறப்பு வரி (அலகு வரி) ரூபா 20 ஐ அரசாங்கம் விதிப்பதனைக் கருதுக. விற்பனையாளர் தாங்கும் மொத்த வரிச்சுமை எவ்வளவாகியிருக்கும்.

1) 4032 ரூபா 2) 2688 ரூபா 3) 6720 ரூபா 4) 3360 ரூபா 5) 5960 ரூபா

12. A என்ற பண்டத்தின் நிரம்பல் சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Q\,S_A = 30 + 5P$$

இப்பண்டத்தின் நிரம்பலாளர்களுக்கு அலகுக்கு ரூ 6 ஐ மானியமாக அரசாங்கம் வழங்குவதனைக் கருதுக. மானியம் வழங்கப்பட்ட பின் ரூபா 4 விலையில் நிரம்பல் தொகை எவ்வளவாகக் காணப்படும்.

1) 50 அலகுகள் 2) 60 அலகுகள் 3) 70 அலகுகள்
4) 80 அலகுகள் 5) 90 அலகுகள்

agaram.lk

13. நெல்லுக்கான போட்டிச் சந்தையில் 1 புசல் நெல்லின் விலை 2 000 ரூபாவாகக் காணப்பட்டது. அரசாங்கம் நெல் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் 1 புசல் நெல்லுக்கு 3 000 ரூபாவை உத்தரவாத விலையாக நிர்ணயித்து சந்தையில் தோன்றும் மிகை உற்பத்தியை கொள்வனவு செய்வதாக கருதுக. இந்நிலையில் நுகர்வோன்மிகை, உற்பத்தியாளன் மிகை, சமூக இழப்பு என்பவற்றின் மாற்றத்தை சரியாகப் புலப்படுத்தும் விடை எது?

| | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளன் மிகை | சமூக இழப்பு |
|---|---|---|---|
| 1) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | குறையும் |
| 2) | குறையும் | குறையும் | அதிகரிக்கும் |
| 3) | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4) | குறையும் | அதிகரிக்கும் | குறையும் |
| 5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

14. குறைந்து செல்லும் விளைவு விதி தொழிற்படுவதை பின்வருவனவற்றுள் எக்கூற்று சிறப்பாக விபரிக்கின்றது.

1) ஒரு நிலையான காரணியுடன் மாறும் காரணியினை அதிகளவில் இணைக்கும் போது மொத்த உற்பத்தி அதிகரித்துச் செல்லும் வேகத்தில் அதிகரித்தல்.
2) சகல உள்ளீடுகளின் அதிகரிப்பு வீதத்தினை விட நிறுவனத்தின் மொத்த வெளியீடு குறைவான வீதத்தில் அதிகரித்தல்.
3) நிறுவனத்தின் சராசரி மாறும் செலவும் எல்லைச்செலவும் குறைந்து செல்லுதல்.
4) உற்பத்தியின் சகல காரணிகளும் அதிகரிக்கப்படும் போது மொத்த உற்பத்தி குறைந்து செல்லும் வீதத்தில் அதிகரித்தல்.
5) ஒரு நிலையான காரணியுடன் மாறும் காரணியினை அதிகளவில் இணைக்கும் போது மாறும் காரணியின் சராசரி உற்பத்தியும் எல்லை உற்பத்தியும் வீழ்ச்சியடைந்து செல்லுதல்.

agaram.lk

15. X பொருளை உற்பத்தி செய்வதற்கான குறுங்கால எல்லைச் செலவு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| X பொருள் (அலகு) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| எல்லைச் செலவு (ரூபா) | 40 | 35 | 28 | 32 | 45 | 60 | 80 |

இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு ரூபா 200 எனின் 5 அலகு வெளியீட்டிற்குரிய மொத்த சராசரி செலவின் (ATC) பெறுமதி யாது?

1) ரூபா 36    2) ரூபா 56    3) ரூபா 84    5) ரூபா 76    5) ரூபா 73

16. நிறைபோட்டி நிறுவனமொன்று சமநிலையிலுள்ளதாகக் கருதுக. பின்வரும் எக்கூற்று உண்மையானதாகியிருக்கும்

1) அதன் சராசரி வருமானத்தினை விட எல்லை வருமானம் சிறியதாகக் காணப்படும்.
2) அதன் எல்லைச் செலவு வளையி சராசரி மாறும் செலவு வளையியின் அதிதாழ்ந்த புள்ளிக்கூடாகச் செல்லும்.
3) அதன் விலையானது எல்லைச் செலவுக்கு சமனாகக் காணப்படும்.
4) அதன் விலையானது எல்லைச் செலவினை விட அதிகமாகக் காணப்படும்.
5) அதன் விலையானது எல்லைச் செலவுக்கும் சராசரி மொத்த மாறும் செலவுக்கும் சமனாகக் காணப்படும்.

17. காரணியொன்றின் நிரம்பல் நெகிழ்ச்சியின் பெறுமதி முடிவிலிலிருந்து பூச்சியமாக மாற்றமடையும் போது

1) அக்காரணி உழைக்கும் வருமானம் முழுவதும் பொருளியல் வாடகையாகக் காணப்படும்.
2) அக்காரணி உழைக்கும் வருமானம் முழுவதும் மாற்றல் கட்டணமாகக் காணப்படும்.
3) அக்காரணி உழைக்கும் வருமானத்தில் மாற்றல் கட்டணத்தின் அளவு அதிகரிக்கும்.
4) அக்காரணி உழைக்கும் வருமானத்தில் பொருளியல் வாடகையின் அளவு குறையும்.
5) அக்காரணி உழைக்கும் வருமானத்தில் மாற்றல் கட்டணத்தின் அளவு பொருளியல் வாடகையின் அளவை விட அதிகமாகக் காணப்படும்.

18. பொருளாதாரமொன்று பின்னடைவுக் கட்டத்திலிருந்து மந்த நிலையை நோக்கிச் செல்லும் போது அப்பொருளாதாரத்தின்

1) மெய்வெளியீடு அதிகரிப்பதோடு தொழில்வாய்ப்பும் அதிகரிக்கும்.
2) மெய்வெளியீடு வீழ்ச்சியடைவதோடு தொழிலின்மை வீதமும் வீழ்ச்சியடையும்.
3) மெய்வெளியீடும் பொதுவிலை மட்டமும் வீழ்ச்சியடையும்.
4) மெய்வெளியீடு வீழ்ச்சியடைவதோடு பணவீக்கமும் அதிகரிக்கும்.
5) மெய்வெளியீடு, தொழில் வாய்ப்பு வீழ்ச்சியடைவதோடு பொது விலை மட்டம் அதிகரிக்கும்.

19. சந்தையை இலக்காகக் கொண்டு பண்ட உற்பத்தியில் ஈடுபடும் தனியார் அரசதுறை நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்படும்.

1) நிதி கூட்டுத்தாபனங்கள்
2) நிதி நிறுவனமல்லாக் கூட்டுத்தாபனங்கள்
3) மத்திய அரசாங்கம்
4) வீட்டுத்துறை
5) வீட்டுத்துறைக்கு சேவையை வழங்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்

agaram.lk

20. பின்வரும் சமன்பாடுகளில் எதனை சரியெனக்கருதுவீர்?

1) சந்தைவிலை மொத்த உள்நாட்டு உற்பத்தி = அடிப்படை விலையில் மொத்தக் கூட்டிய பெறுமதி + உற்பத்தி மீதான தேறிய மானியம்
2) மொத்தத்தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + வெளிநாட்டிற்கு அனுப்பிய தேறிய முதன்மை வருமானம்.
3) தேறிய உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி + நிலையான மூலதன நுகர்வு
4) மூலவளக் கிடைப்பனவு = மொத்த உள்நாட்டு உற்பத்தி + பொருள் சேவைகளின் ஏற்றுமதி.
5) மொத்த உள்நாட்டுச் சேமிப்பு = மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் + பொருள் சேவைகளின் தேறிய ஏற்றுமதி.


21. ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்திற்குள் உள்ளடங்கி வீட்டுத்துறை வருமானத்திற்குள்ளும் உள்ளடங்கும் வருமானம் விடயம் ஒன்று

1) மூலதன நுகர்வு
2) கம்பனி வரி
3) பகிரப்படாத கம்பனி இலாபங்கள்
4) வேலைவாய்ப்பு வருமானம்
5) இளைப்பாற்றுச் சம்பளம்

22. $C = 200 = 0.75Y$ எனும் நுகர்வுச் சார்பு தொடர்பாக நீர் சரியெனக்கருதும் விடை எது?
   1) எல்லா வருமான மட்டத்திலும் சராசரி நுகர்வு நாட்டம் ஒரேயளவாக காணப்படும்.
   2) வருமான மட்டம் அதிகரிக்கும் போது சராசரி நுகர்வு நாட்டம் குறைந்து செல்லும்.
   3) வருமான மட்டம் அதிகரிக்கும் போது எல்லை நுகர்வு நாட்டம் குறைந்து செல்லும்.
   4) வருமான மட்டம் வீழ்ச்சியடையும் போது சராசரி நுகர்வு நாட்டம் குறைந்து செல்லும்.
   5) வருமான மட்டம் வீழ்ச்சியடையும் போது சராசரி நுகர்வு நாட்டமும் எல்லை நுகர்வு நாட்டமும் நிலையாகக் காணப்படும்.

23. ஒரு பொருளாதாரம் சமநிலையிலுள்ள போது முதலீடு (I) 100 மில்லியன் ரூபாவாகவும், வரி (T) 50 மில்லியன் ரூபாவாகவும் தேறிய ஏற்றுமதி (NX) – 80 மில்லியன் ரூபாவாகவும் அரச மாற்றல்கள் (TR) 20 மில்லியன் ரூபாவாகவும் அரச பாதீட்டு பற்றாக்குறை நிலை (BD) = 100 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது.
   இப்பொருளாதாரத்தின் சேமிப்பின் (S) பெறுமதி யாது?
   1) 120 மில்லியன் ரூபா    2) 100 மில்லியன் ரூபா    3) 80 மில்லியன் ரூபா
   4) 160 மில்லியன் ரூபா    5) 60 மில்லியன் ரூபா

24. பின்வரும் வரைபடத்தில் $OY_1$ என்பது சமநிலைத்தேசிய வருமான மட்டமாகும். $OY^*$ என்பது நிறை தொழில்மட்ட தேசிய வருமான மட்டமாகும்.



agaram.lk

   இப்பொருளாதாரத்தின் வீக்க இடைவெளி யாது?
   1) KP    2) $Y^* Y_1$    3) MK    4) M J    5) J K

25. இலங்கையின் பொது விலை மட்டத்தினை அளவிடுவதற்கு பயன்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் (2013 = 100) உணவு மற்றும் மதுசார மற்ற குடிவகைகளின் நிறையிடலின் அளவு யாது?
   1) 28.2    2) 18.0    3) 9.8    4) 32.0    5) 44.0

26. பொருளாதாரமொன்றின் பெயரளவு உள்நாட்டு உற்பத்தி 10 சதவீதத்தால் அதிகரித்தது. பணத்தின் சுற்றோட்ட வேகத்தில் மாற்றம் எதுவும் நிகழ்வில்லை எனவும் மெய் உள்நாட்டு உற்பத்தி 4 சதவீதத்தால் அதிகரிக்கும் போது பொதுவிலை மட்டத்தில் ஏற்பட்ட மாற்ற வீதம் யாது?
   1) 6 சதவீதத்தால் அதிகரிக்கும்    2) 10 சதவீதத்தால் அதிகரிக்கும்
   3) 14 சதவீதத்தால் அதிகரிக்கும்    4) 6 சதவீதத்தால் குறையும்
   5) 4 சதவீதத்தால் குறையும்

27. வீட்டுத்துறையினரும் வர்த்தகத்துறையினரும் எழுப்பும் பணத்தின் மீதான கேள்வியானது.

1) வருமானம் உயர்ந்தால் வீழ்ச்சியடையும். ஆனால் வட்டி வீதம் உயர்ந்தால் அதிகரிக்கும்.
2) வருமானம் குறைந்தால் அதிகரிக்கும். ஆனால் வட்டி வீதம் குறைந்தால் அதிகரிக்கும்.
3) வருமானம் உயர்ந்தால் அதிகரிக்கும் ஆனால் வட்டிவீதம் உயர்ந்தால் வீழ்ச்சியடையும்.
4) வருமானம், வட்டிவீதம் இரண்டும் உயர்ந்தால் அதிகரிக்கும்.
5) வருமானம் உயர்ந்தால் மாறாதிருக்கும். ஆனால் வட்டி வீதம் உயர்ந்தால் வீழ்ச்சியடையும்.

28. இலங்கையில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் அதன் மூலம் வங்கி நடவடிக்கைகளை செய்வதற்கும் அனுமதி பெற்றுள்ள இடைத்தரகு நிதி நிறுவனத்துக்குள் **உள்ளடங்காதது** எது?

1) அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகள்.
2) ஊழியர் சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியம்.
3) பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்.
4) சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கம்.
5) அனுமதிப்பத்திரம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்.

29. இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை சட்டத்தின் பிரதான நோக்கமாக எதனைக் கருத முடியும்.

1) நெகிழ் தன்மையற்ற பணவீக்க இலக்கிடல்.
2) சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம்.
3) பணப்பெருக்கி ஊடாக ஒதுக்குப்பணத்தினை நெறிப்படுத்துதல்.
4) 4 – 6 சதவீத வீச்சினைக் கொண்ட நெகிழ்வுள்ள பணவீக்க இலக்கு.
5) 2 – 6 சதவீத வீச்சினைக் கொண்ட நெகிழ்வுள்ள பணவீக்க இலக்கு.

agaram.lk

30. வணிக வங்கியொன்றின் ஐந்தொகை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| **பொறுப்புக்கள் பெறுமதி (ரூபா மில்லியன்)** | **சொத்துக்கள் பெறுமதி (ரூபா மில்லியன்)** |
|---|---|
| வைப்புக்கள் 150, 000 | ஒதுக்குகள் 50, 000<br>திரைசேரி முறிகள் 30, 000<br>கடன்கள் 70, 000 |
| மொத்த பொறுப்புக்கள் 150, 000 | மொத்த சொத்துக்கள் 150, 000 |

சட்ட ரீதியான நியதி ஒதுக்கு வீதம் 7.5% எனின் இவ்வங்கியானது எதிர்காலத்தில் வழங்கக்கூடிய உச்ச அளவிலான புதிய கடன்களின் தொகை யாது?

1) 35, 000 மில். ரூபா 2) 38, 750 மில. ரூபா 3) 516, 667 மில். ரூபா
4) 108. 750 மில். ரூபா 5) 68, 750 மில். ரூபா

31. பின்வருவனவற்றுள் எது சந்தைத் தோல்விக்கு **காரணமன்று**

1) வெளிவாரி விளைவுகளை கவனத்தில் கொள்ளாமை.
2) நிறைவில் போட்டியும் தனியுரிமையும் நிலவுதல்.
3) சமூக நலன் பண்டங்களை சந்தை உத்தம மட்டத்தில் வழங்குகின்றமை.
4) சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் பண்டங்களை சந்தை உத்தம மட்டத்தினை விட அதிகமாக வழங்குதல்.
5) பொது வளங்களின் மிகைப் பாவனை.

32. நுகர்விலிருந்து விலக்கப்படமுடியாததும் நுகர்வில் போட்டித்தன்மை கொண்டதுமானதிற்குமான மிகச் சிறந்த உதாரணம் பின்வருவனவற்றுள் எது?

1) உலக சமாதானம் 2) புற்தரை 3) போக்குவரத்துப் பாதைகள்
4) கனகர வாகனம் 5) தேசிய பாதுகாப்பு

33. வரியினை அறவிடும் போது பொருளாதாரத்தில் வளப்பங்கீட்டுச் செயற்பாட்டிற்கு தாக்கம் ஏற்படாத வகையில் இருப்பதனை வரியின் எத்தத்துவம் வெளிப்படுத்தும்?

1) நியாயத்தன்மை 2) இலகு தன்மை 3) சிக்கனத்தன்மை
4) நெகிழ்வுத் தன்மை 5) வினைத்திறனான தன்மை

34. அரசாங்கத்தின் மொத்தப் பெறுகைகளிலிருந்து அரச கடன்களுக்கு செலுத்திய வட்டிக் கொடுப்பனவை நீக்கிய பின் உள்ள அரசின் மொத்தக் கொடுப்பனவை கழிக்க வரும் தொகையை எவ்வாறு அழைப்பர்.

1) அரச பாதீட்டின் நடைமுறைகணக்கு மிகை.
2) அரச பாதீட்டின் மொத்தப் பற்றாக்குறை.
3) அரச பாதீட்டின் தேறிய பற்றாக்குறை.
4) அரச பாதீட்டின் மொத்த மீதி.
5) அரச பாதீட்டின் முதன்மைக் கணக்கு மீதி

35. இலங்கை அரசாங்கம் பாதீட்டு பற்றாக்குறையை நிதியிடுவதற்காக சந்தைக் கடன்களை பெறுவதற்கு அண்மை ஆண்டுகளில் பயன்படுத்திய முதன்மைக் கருவிகள்.

1) திறைசேரி முறியும் இலங்கை அபிவிருத்தி முறியும்.
2) திறைசேரி முறியும் திறைசேரி உண்டியல்களும்.
3) திறைசேரி உண்டியல்களும் மத்தியவங்கி முற்பணமும்.
4) இலங்கை அபிவிருத்தி முறியும் மத்தியவங்கி முற்பணமும்.
5) திறைசேரி முறியும் ரூபாய் பிணைகளும்.

agaram.lk

36. பின்வரும் அட்டவணை ஜப்பான், கொரியா, ஆகிய நாடுகளில் ஓரலகு வெளியீட்டைப் பெறுவதற்காக தேவைப்படும் ஊழிய மணித்தியாலத்தை காட்டுகின்றது.

| நாடுகள் | மின்குமிழ் | கணினி |
|---|---|---|
| ஜப்பான் | 04 | 20 |
| கொரியா | 05 | 50 |

இத்தரவுகளின் அடிப்படையில் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

1) கணினி உற்பத்தியில் ஜப்பானும் மின்குமிழ் உற்பத்தியில் கொரியாவும் முழுநயத்தைக் கொண்டுள்ளது.
2) மின்குமிழ் உற்பத்தியில் ஜப்பானும் கணினி உற்பத்தியில் கொரியாவும் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டுள்ளது.
3) கொரியா கணினியை ஏற்றுமதி செய்யும் ஜப்பான் மின்குமிழை ஏற்றுமதி செய்யும்.
4) கொரியா மின்குமிழ் உற்பத்தியில் சிறக்குமியல்பை பெற ஜப்பான் கணினி உற்பத்தியில் சிறக்குமியல்பை பெற்றுக்கொள்ளும்.
5) கொரியா கணினி உற்பத்தியில் சிறக்குமியல்பைப்பெற ஜப்பான் மின்குமிழ் உற்பத்தியில் சிறக்குமியல்பை பெற்றுக்கொள்ளும்.

37. ஒரு நாட்டிற்கு சர்வதேச வர்த்தகத்தின் மூலம் கிடைக்கின்ற இயற்கை நன்மையுடன் தொடர்புடைய விடயம்.

1) தொழிநுட்ப முன்னேற்றம்
2) பொருள் வேறுபாடு
3) நுகர்வு அதிகரித்தல்
4) அளவுத்திட்ட சிக்கனங்கள்
5) வர்த்தக உடன்படிக்கைகள்.

38. பின்வரும் அட்டவணை ஒரு நாட்டின் ஈராண்டுக்காலப்பகுதியிலான பொருளாதாரச் செயற்பாட்டினைக் காட்டுகின்றது.

| ஆண்டு | ஏற்றுமதியின் அளவுச்சுட்டி | இறக்குமதியின் அளவுச்சுட்டி | நாணயமாற்று வீதம் |
|---|---|---|---|
| 1 | 100 | 100 | 175 |
| 2 | 90 | 100 | 175 |

பின்வருவனவற்றுள் எது மேற்போந்த விபரங்களுடன் இசைவானது.

1) ஏற்றுமதியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
2) இறக்குமதியின் விலை அதிகரித்துள்ளது.
3) வர்த்தக மாற்று வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
4) வர்த்தக நிலுவை மோசமடைந்து செல்கின்றது.
5) வர்த்தக மாற்று வீதத்தில் ஓர் மேம்பாடு ஏற்பட்டுள்ளது.

39. பின்வரும் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் எதனை இலங்கையின் சென்மதி நிலுவையில் பணிகள் கணக்கின் வரவு (Credit) உருப்படியாக பதிவு செய்ய முடியும்.

1) ஐக்கிய அமெரிக்காவுக்கு 50, 000 டொலர் பெறுமதியான ஆடைகளை ஏற்றுமதி செய்தல்.
2) மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் இலங்கையிலுள்ள தனது பெற்றோருக்கு 1000 டொலர்களை அனுப்புதல்.
3) இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு தலயாத்திரிகை செய்யும் பயணிகளால் இந்தியாவுக்கு 50,000 டொலர்கள் கிடைத்தல்.
4) இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பயணிகளால் கிடைத்த 80, 000 டொலர் நுழைவு விசாக்கட்டணம்.
5) ஜப்பானிலிருந்து மோட்டார் வாகனங்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக பயன்படுத்திய கப்பலுக்காக ஜப்பானிய கப்பல் கம்பனிக்கு இலங்கை செலுத்திய 20, 000 டொலர் கட்டணம்.

40. 2017ம் ஆண்டுத்தரவுகளின் படி இலங்கையின் இறக்குமதிகளின் பிரதான தோற்றுவாயாக காணப்படும் நாடும் மொத்த இறக்குமதிகளில் அதன் பங்களிப்பு வீதத்தினையும் சரியாக வெளிப்படுத்தும் விடை?

1) சீனா – 22%
2) இந்தியா – 32%
3) ஐக்கிய அமெரிக்கா – 29%
4) இந்தியா – 29%
5) இந்தியா – 22%

agaram.lk

41. மிதக்கும் செலவாணிச் சந்தையில் எந்நிகழ்வு இலங்கை ரூபாவின் வெளிப்பெறுமதியை ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக தேய்வடையச் செய்யும்.
   1) ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கையின் ஆடை ஏற்றுமதி உழைப்புக்கள் அதிகரித்தமை.
   2) ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வருகின்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தமை.
   3) ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான இறக்குமதிகளின் செலவீனங்கள் அதிகரித்தமை.
   4) இலங்கையிலிருந்தான ஐக்கிய அமெரிக்காவின் இறக்குமதிகளின் செலவீனங்கள் அதிகரித்தமை.
   5) இலங்கையை நோக்கிய ஐக்கிய அமெரிக்காவின் முதலீட்டு உட்பாய்ச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பு.

42. பிராந்திய கூட்டுக்குள் அங்கத்துவம் பெறா நாடுகளுடன் அங்கத்துவ நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடும் போது அங்கத்துவ நாடுகளின் விருப்பின் படி வர்த்தக தடைகளை ஏற்படுத்துவதற்காகவும் அங்கத்துவம் பெறும் நாடுகளுக்கிடையில் வர்த்தகம் தடையின்றி நடைபெறுவதற்காகவும் உருவாக்கப்பட்ட பொருளாதார ஒருங்கிணைப்பை எவ்வாறு அழைப்பீர்?
   1) சுதந்திர வர்த்தக பிரதேசம் (F.T.A)
   2) சுங்கச் சங்கம் (C.U)
   3) பொதுச்சந்தை (C.M)
   4) பொருளாதார மற்றும் நிதிச்சங்கம் (Eu)
   5) முழுமையான பொருளாதார ஒருங்கிணைப்பு (F.E.T)

43. பொருளாதார வளர்ச்சியானது வழமையாகப் பின்வருவனவற்றுள் எதுவாக வரையறுக்கப்படும்.
   1) பெயரளவு உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு.
   2) காலப்போக்கில் மெய்வெளியீட்டில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான வீழ்ச்சி.
   3) மொத்தக் கேள்வியின் குறுங்கால அதிகரிப்பினால் ஏற்படுகின்ற மெய்வெளியீட்டின் அதிகரிப்பு.
   4) சாத்தியவள வெளியீட்டில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு.
   5) மெய் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட குறுங்கால அதிகரிப்பு.

agaram.lk

44. பொருளாதார வளர்ச்சியின் செலவாக எதனைக் கருத முடியாது?
   1) மீளுருவாக்கம் செய்ய முடியாத வளங்கள் அழிவடைதல்.
   2) அரசாங்கத்தின் நிதி வலுவடைதல்.
   3) பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் தோன்றுதல்.
   4) நிகழ்கால நுகர்வு குறைவடைதல்.
   5) உற்பத்தியில் வெளிவாரிச் செலவுகள் தோன்றுதல்.

45. இலங்கையின் அண்மைக்கால மானிட அபிவிருத்திச் சுட்டியின் பெறுமானத்தையும் இலங்கையின் நிலையையும் சரியாக வெளிப்படுத்தும் விடை.

| | **H. D. I இன் பெறுமானம்** | **நிலை** |
|---|---|---|
| 1) | 0.770 | 76 |
| 2) | 0.766 | 76 |
| 3) | 0.770 | 73 |
| 4) | 0.786 | 76 |
| 5) | 0.766 | 71 |

46. வருமானப் பங்கீட்டில் காணப்படும் ஏற்றத்தாழ்வை அறிந்து கொள்வதற்காக இலங்கை தொகை மதிப்புத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற அளவீட்டு முறை எது?
1) மானிட அபிவிருத்திச் சுட்டெண்.
2) மானிட வறுமைச் சுட்டெண்.
3) ஐயனை பரவல் விகிதம்.
4) லோறன்ஸ் வளையி.
5) தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி.

47. பின்வரும் அட்டவணை பொருளாதாரமொன்றில் தரப்பட்ட காலப்பகுதியொன்றுக்குரிய குடித்தொகை மற்றும் தொழிற்படைத் தரவுகளைக் காட்டுகின்றது.

| **சனத்தொகை (மில்லியன்களில் )** | **தொழில்புரியும் வயதுச் சனத்தொகை** | **தொழில்புரியும் சனத்தொகை (மில்)** | **தொழிலற்றோர் சனத்தொகை (மில்)** |
|---|---|---|---|
| | (மில்) | (மில்) | (மில்) |
| 25 | 15 | 10 | 02 |

இப்பொருளாதாரம் தொடர்பில் தொழிற்படையின் பங்குபற்றல் வீதமும் தொழிலின்மை வீதமும் முறையே.
1) 80% உம் 16.66% உம்
2) 60% உம் 16.66% உம்
3) 80% உம் 66.66% உம்
4) 75% உம் 16.66% உம்
5) 20% உம் 16.66% உம்

48. இலங்கையின் சனத்தொகை பரம்பலில் கடந்த பல வருடங்களாக ஏற்பட்ட மாற்றங்களில் எது **உண்மையற்றது.**
1) சனத்தொகையின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைதல்.
2) வயதுக்கட்டமைப்பில் முதியவர்களின் சதவீதம் உயர்வடைதல்.
3) ஆயுள் எதிர்பார்க்கை உயர்ந்து செல்லுதல்.
4) வயதுக்கட்டமைப்பில் சிறுவர்களின் சதவீதம் உயர்வடைதல்.
5) இறப்பு வீதங்கள் தாழ்ந்த மட்டத்தில் காணப்படும் அதேவேளை பிறப்பு வீதங்கள் வீழ்ச்சியடைந்து செல்லுதல்.

agaram.lk

49. அறிவுசார் பொருளாதாரச் சுட்டெண்ணை தயாரிப்பதற்கு **பயன்படாத நியமம்** ஒன்று?
1) புத்தாக்கமும் தொழில்நுட்பப்பயன்பாட்டின் ஈடுபாடும்.
2) தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்.
3) கல்வியும் பயிற்சியும்.
4) தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு வசதிகள்
5) பொருளாதார ஊக்குவிப்புக்களும் பயன்பாட்டின் கட்டமைப்பும்.

50. பின்வரும் விடயங்கள் 2025ம் ஆண்டில் வளமான நாடு இலங்கை என்னும் V 2025 யுடன் தொடர்புடைய விடயங்களாகும்.
A – அனைவருக்கும் வீட்டு வசதி
B – சக்தி மிக்க நிதிவளம்
C – பொருத்தமான நிலையான விலை
D – அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகம்
E – சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதம்
மேலே காட்டப்பட்டவற்றில் V 2025 இன் பேரண்டப் பொருளாதாரத்தின் முக்கியமான மூன்று தூண்களையும் உள்ளடக்கிய சரியான விடைக.
1) A, B, C
2) B, C, D
3) B, C, E
4) A, C, E
5) C, D, E

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, யூன் - 2019

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | 21 | T | II | பொருளியல் - II | நேரம் :- மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|---|---|---|

## பகுதி II

**அறிவுறுத்தல்கள்**

- ❖ **உப பகுதி "அ" இலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையும்**
- ❖ **உப பகுதி "ஆ" இலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

### உபபிரிவு "அ"

**இப்பகுதியிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்க?**

01.

i) வள அருமை, தெரிவு மற்றும் அமையச்செலவு என்பவற்றை வரையறுத்து அவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக. (4 புள்ளிகள்)

ii) "பண்டம்" என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? பண்டங்களின் வகைகளைக் கூறி அவற்றை உதாரணங்கள் மூலம் விளக்குக. (4 புள்ளிகள்)

iii) பொருளாதார அமைப்புக்கள் என்றால் என்ன? பொருளாதார அமைப்புக்களை வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நியமங்கள் எவை? (4 புள்ளிகள்)

iv) "பொருளாதாரமொன்றில் சகல வளங்களையும் வினைத்திறனுள்ள வகையில் உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்தும் பொருளாதாரமொன்றில் வளங்களின் வினைத்திறனை காண முடியும்" இக்கூற்றினை ஏற்பீரா? விளக்குக? (4 புள்ளிகள்)

v) அ) உற்பத்தி சாத்திய வளையியின் ஆரம்ப புள்ளிக்கு குழிவான வடிவம் உற்பத்தி சாதனங்கள், அமையச் செலவுகள் என்பன பற்றி எதனைக் குறிப்பிடுகின்றது? (2 புள்ளிகள்)

ஆ) பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி சாத்திய வளையியில் வெளிப்படுத்துக?
1) நாட்டில் வரட்சி காரணமாக பல மணி நேரம் மின்வெட்டு ஏற்படல்.
2) இயற்கை அனர்த்தத்தின் காரணமாக மூலதன வளங்கள் அழிவடைதல். (2 புள்ளிகள்)

02.

i) வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி அவை இரண்டும் எவ்வாறு கேள்வி விதியுடன் தொடர்புபடுகின்றது என்பதனையும் தெளிவுபடுத்துக? (4 புள்ளிகள்)

ii) வருமான விளைவு, பதிலீட்டு விளைவை அடிப்படையாகக் கொண்டு இழிவுப் பண்டத்தையும் கிபன் பண்டத்தையும் வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iii) நெகிழ்ச்சியுள்ள கேள்வி, நெகிழ்ச்சியற்ற கேள்வி என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iv) X என்ற பண்டத்தின் இரு விலைகளும் அவற்றிற்குரிய நுகர்வோன் செலவும் பின்வருமாறு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| விலை (ரூபாவில்) | நுகர்வோன் செலவு (ரூபாவில்) |
|---|---|
| 50 | 1 000 |
| 75 | 1 200 |

அ) ரூபா 50, ரூபா 75 ஆகிய விலைகளில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை கணிக்குக? (2 புள்ளிகள்)

ஆ) ரூபா 50 க்கும் ரூபா 75 க்கும் இடையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியினைக் கணிக்குக? (1 புள்ளி)

இ) X என்ற பண்டம் கேள்வி நெகிழ்ச்சியுள்ளதா? கேள்வி நெகிழ்ச்சி அற்றதா எனக் கூறுக? (1 புள்ளி)

v) A என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது?

$$Qd_A = 200 - 5P$$
$$Qs_A = -50 + 5P$$

அ) மேலேயுள்ள கேள்வி, நிரம்பல் சார்புகளை நிலைமாற்றுக? (2 புள்ளிகள்)

ஆ) சமநிலை விலையில் நுகர்வோர் மிகை, உற்பத்தியாளர் மிகையைக் கணிப்பிடுக? (2 புள்ளிகள்)

03.

i) Y பண்டத்தின் நிரம்பல் அட்டவணை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விலை (P) | 1 | 3 | 5 | 7 | 9 | 11 |
|---|---|---|---|---|---|---|
| நிரம்பல் தொகை ($Q_S$) | 20 | 40 | 60 | 80 | 100 | 120 |

இப்பண்டத்தின் மீது அலகுக்கு அரசு 4 ரூபா விற்பனை வரியை விதிக்கும் போது ஒவ்வொரு விலையிலும் வரிக்கு பின்னுள்ள நிரம்பல் தொகையை பதிவு செய்க? (3 புள்ளிகள்)

ii) ஒரு பண்டத்தின் மீது அரசாங்கம் விற்பனை வரியினை விதிக்கின்ற போதும் அப்பண்டத்தின் சமநிலை விலை மாற்றமடையாமல் காணப்படும் இரு சந்தர்ப்பங்களையும் பொருத்தமான வரைபடங்கள் மூலம் வெளிப்படுத்துக? (4 புள்ளிகள்)

iii) அரிசி என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 800 - 4P$$
$$Qs = 100 + 6P$$

P என்பது கிலோகிராம் ஒன்றின் விலையையும் Q என்பது கிலோக்கிராமும் ஆகும். அரசாங்கம் அரிசி உற்பத்தியாளனுக்கு அலகுக்கு ரூபா 20 ஐ மானியமாக வழங்குவதாக கருதுக.

அ) மானியத்திற்குப் பின் நுகர்வோன் செலுத்தும் விலையையும் விற்பனையாளர் பெறும் விலையையும் கணிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஆ) மானியத்திற்கு பின் உற்பத்தியாளர் மிகையை கணிப்பிடுக? (2 புள்ளிகள்)

இ) மானியத்தின் காரணமாக சமூக நலனில் ஏற்பட்ட பாதிப்பு எவ்வளவு? (1 புள்ளி)

iv) உச்ச விற்பனை விலை விதிப்பதால் கேள்வித்தொகையும் நிரம்பல் தொகையும் சமப்படாத போது சந்தை விலை பண்டங்களை பங்கீடு செய்வதற்கு இயக்கமற்று போவதால் விலையல்லாத பங்கீட்டு மூலகங்கள் கையாளப்படும் அவ் மூலகங்களை குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

v) உத்தரவாத விலைத்திட்டத்தில் குறைநிரப்பு கொடுப்பனவு முறையை கையாளும் போது ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

04.

i) குறுங்கால் உற்பத்திச்சார்பு, நீண்டகால உற்பத்திச்சார்பு என்வற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

ii) குறைந்து செல்லும் விதி என்றால் என்ன, அவ்விதிக்குரிய எடுகோள்கள் யாவை? (4 புள்ளிகள்)

iii) சராசரி மொத்தச் செலவு (ATC), சராசரி மாறும் செலவு (AVC) என்பவற்றை வரையறுத்து அவையிரண்டிற்கும் இடையிலான வேறுபாடு வெளியீடு அதிகரிக்கும் போது அதிகரித்துச் செல்லுமா? குறைந்து செல்லுமா? எனக் கூறி விளக்குக? (4 புள்ளிகள்)

iv) சந்தை அமைப்புக்கள் நான்கினையும் குறிப்பிட்டு அவை வேறுபடுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

v) குறுங்காலத்தில் இயங்கும் நிறைபோட்டி நிறுவனமொன்று ரூ 70 விலையில் 200 அலகுகளை விற்பனை செய்வதாக கருதுக? இந்நிறுவனத்தின் மொத்தச் செலவு 16 000 ரூபாவாகவும் மொத்த நிலையான செலவு 3 000 ரூபாவாகவும் காணப்பட்டால் இந்நிறுவனம் தொடர்ந்தும் தொழிலில் நீடித்திருக்க முடியுமா? விளக்குக? (4 புள்ளிகள்)

05.

i) அடிப்படை விலையையும் கொள்வனவாளர் விலையையும் வேறுபடுத்தும் நான்கு விடயங்களையும் தருக? (4 புள்ளிகள்)

ii) நிறுவன அலகுகள் என்பதால் நீர் கருதுவது யாது? நிறுவன அலகுகளை எவ்வாறு வகைப்படுத்துவீர்? (4 புள்ளிகள்)

iii) மொத்த உள்நாட்டுச் செலவினையும் மொத்த தேசிய வருமானத்தினையும் வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதாரத் தரவுகள் வருமாறு பெறுமதிகள் பில்லியன் ரூபாக்களிலுள்ளது.

$C = 400 + 0.8yd$

$G = 200$

$\mathrm{I} = 150$

தேறிய வரி $(\mathrm{NT}) = 50$

தேறிய இறக்குமதி $(\mathrm{NM}) = 80$

பின்வருவனவற்றை கணிப்பிடுக?

அ) சமநிலை வெளியீட்டுப் பெறுமதி (2 புள்ளிகள்)

ஆ) அரச சேமிப்பு (1 புள்ளி)

இ) உள்நாட்டு சேமிப்பு (2 புள்ளிகள்)

ஈ) மற்றவைகள் மாறாத நிலையில் இப்பொருளாதாரத்தின் முதலீடு 50 பில்லியன் ரூபாவினால் அதிகரித்தால் சமநிலை வெளியீட்டு பெறுமதி எவ்வளவால் அதிகரிக்கும்? (2 புள்ளிகள்)

உ) வரிப்பெருக்கியின் பெறுமதி? (1 புள்ளி)

**உபபிரிவு "ஆ"**

**இப்பகுதியிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்க?**

agaram.lk

06.

i) பணத்தின் பரிமாற்றூடக தொழிற்பாட்டினை விளக்கி அத்தொழிற்பாட்டின் முக்கியத்துவங்களையும் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

ii) ஒதுக்குப்பணம், பண நிரம்பல் மற்றும் பணப்பெருக்கி என்பவற்றை வரையறுத்து அவற்றிற்கிடையிலான தொடர்பினையும் விளக்குக? (4 புள்ளிகள்)

iii) செலவுத்தூண்டல் பணவீக்கம் பல்வேறு அமுக்கக் குழுக்கள் செய்கின்ற போராட்டத்தின் காரணமாக ஏற்படுவதாக பொருளியலாளர்கள் கருதுகின்றனர். அமுக்கக் குழுக்களின் தொழிற்பாடு எவ்வாறு செலவுத்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை தெளிவுபடுத்துக? (4 புள்ளிகள்)

iv) நிதி முறைமை என்றால் என்ன? இலங்கையிலுள்ள நிதி நிறுவன கட்டமைப்பின் நான்கு பிரிவுகளும் யாவை? (4 புள்ளிகள்)

v) அ) இலங்கை மத்திய வங்கியானது பணக்கொள்கையை நடைமுறைப்படுத்த தெரிவு செய்துள்ள செயற்பாட்டு இலக்கு, இடையீட்டு இலக்கு ஆகிய மாறிகளுடன் தொடர்புடைய விடையத்தினை தனித்தனியே குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஆ) வணிக வங்கிகளின் பணவாக்கச் செயற்பாட்டை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

07.

i) நவீன சந்தைப் பொருளாதார முறையில் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும் கருமங்களை பட்டியற்படுத்துக? (4 புள்ளிகள்)

ii) உற்பத்தியில் வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது சந்தை உத்தம வெளியீட்டினை ஏற்படுத்துவதில்லை. பொருத்தமான வரைபடங்கள் மூலமாக விளக்குக? (4 புள்ளிகள்)

iii) வரியின் மிகைச்சுமை (Excess Burden of Taxation), வரித்தாக்கம் (Tax Compliance) என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iv) அரசின் நடைமுறைச் செலவு என்பதனை சுருக்கமாக விளக்கி அச்செலவின் அதிகரிப்பினால் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

v) அ) ஒதுக்கீட்டு மசோதா (Appropriation Bill) மற்றும் கணக்கின் மீதான வாக்கெடுப்பு (Vote on Account) என்பவற்றை வேறுபடுத்துக. (2 புள்ளிகள்)

ஆ) வெளித்தள்ளுகை விளைவு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

08.

i) பின்வரும் அட்டவணை X, Y எனும் பண்டங்களை உற்பத்தி செய்யும் நாடு A, நாடு B ஆகியவற்றின் ஓரலகு உள்ளீட்டிற்குரிய வெளியீட்டு மட்டத்தை வெளிப்படுத்துகின்றது.

| பண்டம் / நாடுகள் | வெளியீட்டு மட்டம் | |
|---|---|---|
| | **X பண்டம்** | **Y பண்டம்** |
| நாடு A | 50 | 40 |
| நாடு B | 25 | 10 |

அ) ஒவ்வொரு நாடும் எப்பண்ட உற்பத்தியில் சிறக்குமியல்பு பெற வேண்டும். (2 புள்ளிகள்)

ஆ) ஒப்பீட்டு நயத்தின் அடிப்படையில் இவ்விரண்டு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் இடம்பெறுமாயின் பரிமாற்று வீதம் எவ்வாறு காணப்பட வேண்டும். (2 புள்ளிகள்)

ii) பெயரளவு பாதுகாப்பு வீதம், செயற்படு பாதுகாப்பு வீதம் என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

iii) வருமான வர்த்தக மாற்று வீகிதம் என்றால் என்ன, இவ் விகிதம் அதிகரிப்பதன் பொருளாதார விளைவுகளையும் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

iv) 2017ம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையில் வர்த்தக மீதி – 9619 மில்லியன் டொலர்களாகவும் நடைமுறைக் கணக்கு – 2309 மில்லியன் டொலர்களாகவும் காணப்பட்டது. இவ்வேறுபாட்டை எவ்வாறு விளக்குவீர்? (4 புள்ளிகள்)

v) நாணயமாற்று வீத தேய்வு என்றால் என்ன? அதன் பொருளாதார விளைவுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

agaram.lk

09.

i) பொருளாதார வளர்ச்சி வீதம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவங்களையும் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)

ii) உயர்மட்ட பொருளாதார வளர்ச்சி வீதத்தை (8% - 10%) அடைவதற்கு இலங்கையில் காணப்படும் பலவீனங்களை சுருக்கமாக விளக்குக? (5 புள்ளிகள்)

iii) மானிட வறுமைச்சுட்டெண், வறுமை இடைவெளிச்சுட்டெண் என்பவற்றை வேறுபடுத்துக? (5 புள்ளிகள்)

iv) வேலையின்மை என்றால் என்ன? இலங்கையில் வேலையின்மை தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை? (5 புள்ளிகள்)

10.

i) அறிவு சார் பொருளாதாரத்தை நோக்கி இலங்கை செல்வதில் எதிர் நோக்கும் சவால்கள் யாவை? (5 புள்ளிகள்)

ii) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் 2016ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகள் (S. D. Gs) 17 குறிக்கோள்களை உள்ளடக்கியுள்ளது. அதிலுள்ள முதல் ஐந்து குறிக்கோள்களையும் எழுதுக. (5 புள்ளிகள்)

iii) 2025ம் ஆண்டில் இலங்கையை வளமான நாடாக மாற்றுதல் என்ற (V 2025) தூர நோக்குத் திட்டத்தின் முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)

iv) இலங்கையில் உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய ஓர் உபாயமாக அரச – தனியார் பங்குடமையின் (PPP) அனுகூலங்கள் யாவை? (5 புள்ளிகள்)